IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 157/2013 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Thanikodi | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **08-11-2022**

குறுக்கு விசாரணை (வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்) : 08-11-2022**

உங்களுடைய பெயர் தனிக்கொடியா அல்லது தனிக்கோடியா என்றால் இரண்டு விதமாகவும் அழைப்பார்கள். உங்களுடைய சொந்த ஊர் எது என்றால் அய்யனக்கவுண்டன்பட்டி ஆகும். நீங்கள் என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால்ல விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்து தவிர வேறு சொத்துக்களும் உங்களுக்கு உள்ளது என்றால் ஆம். அதேபோல, இந்த வழக்கு தவிர வேறு சில வழக்குகளும் சமூகம் நீதிமன்றத்தில் உங்களுக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆம். இந்த பிரதிவாதிக்கும் உங்களுக்கும் இந்த வழக்கை தவிர வேறு வழக்கு ஏதுவும் இலல்லை என்றால் ஆம். தாவா சொத்து எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் கொண்டையம்பட்டி கிராமத்தில் உள்ளது. 1ம் பிரதிவாதி உங்களுக்கு உறவுமுறையை சேர்ந்தவரா என்றால் இல்லை. இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகளான சித்ரா, மகாராஜன் ஆகியோர்கள் உங்கள் உறவுமுறையா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி உங்களது உறவினர் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த தேதியில் உங்களால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் 24.04.1996 ஆகும். தாவா சொத்து உங்களால் பதிவு செய்யப்பட்ட கிரையம் வாயிலாக வாங்கப்பட்டது என்றால் ஆம். மேற்படி தாவா சொத்தானது உங்களால் கேரள மாநிலத்தில் பாறசாலை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆம்.

உங்களுடைய கிராமம் அய்யனக்கவுண்டன்பட்டியோ, கொண்டையன்பட்டி கிராமமோ வாடிப்பட்டி சார்பதிவு அலுவலகத்திற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் உங்களால் தாவா சொத்து பதிவு செய்திடாமல் கேரள மாநிலத்தில் பாறசாலை பதிவு அலுவலகத்தில் சொத்து பதிவு செய்ததற்கு என்ன காரணம் என்றால் 1994 முதல் 1996 கால கட்டத்தில் சொத்து பதிவு செய்தது தொடர்பாக இந்தியா முழுவதும் எங்கு வேண்டுமென்றாலும் சட்டம் இருந்தது. வாடிப்பட்டி சார்பதிவு அலுவலகத்தில் தாவா சொத்து சம்பந்தமாக உங்கள் தரப்பில் பதிவு செய்திட முடியாத காரணத்தினால் வெளி மாநிலமான கேரளாவில் பதிவு செய்துள்ளீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.1ல் உங்களுக்கு சொத்தை கிரையம் எழுதி கொடுத்த தரப்பினர்கள் உறவினர்களா என்றால் எனக்கு பங்காளிகள் ஆவார்கள்.

கடந்த 17.01.2013ல் வா.சா.ஆ.4 வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ,4ல் 1ம் பிரதிவாதி ராஜா என்பவருக்கு 2ம் பிரதிவாதி சித்ரா என்பவரால் வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் வா.சா.ஆ,4 ஏற்படுவதற்க முன்பு நிலக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கு பின்னிட்டு தான் வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. நிலக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி நிலக்கோட்டை சார்பதிவலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை அனுசரித்து தான் வா.சா,ஆ.4 ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா,ஆ.4ல் 2ம் பிரதிவாதி சித்ரா அவருடைய பெயரில் தனிப்பட்ட 987 ஏற்பட்டு அதை அனுசரித்து தான் சொத்தை என் கைவசம் வைத்து அனுபவித்து வருவதாக வா.சா,ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும், சாட்சி சொத்தை 2ம் பிரதிவாதி சித்ரா அனுபவம் செய்து வரவில்லை, வா.சா.ஆ.4ல் அனுபவம் செய்துள்ளதாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்தார். 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து கிரையம் ஏற்பட்டு அதை அனுசரித்து 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2ம் பிரதிவாதியால் கிரைய ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் உள்ளது. உண்மையில் தாவா சொத்தில் நான் தான் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். தாவா சொத்தில் நீங்கள் தான் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறீர்கள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கிஸ்து ரசீது தாக்கல்

செய்துள்ளேன்.

வா.சா.ஆ,2ல் கிஸ்து ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு எனது தந்தையார் அரசக்கவுண்டர் என்பவர் பெயரில் உள்ளது என்று சாட்சியம் அளித்தார். சொத்து உங்கள் பெயரில் பதிவு செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில், கிஸ்து ரசீதுகள் உங்கள் தகப்பனார் பெயரில் ஏற்பட்டுள்ளது தவறானது, மேற்படி வா.சா.ஆ.2 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்று சொன்னால் அது தவறு. எனது தந்தையார் பெயரில் கிஸ்து ரசீதுகள் உள்ளது சரிதான். வா.சா,ஆ.2 கிஸ்து ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் அது சரியல்ல. சம்பந்தப்பட்ட ஆவணம் ஆகும். தாவா சொத்து உங்களுடைய அனுபவ சுவாதீனத்தில் இல்லாத நிலையில் நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்துடன் வா.சா,ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் யார் என்றால் ஜோதிபாசு மற்றும் குணசேகரன் ஆகியோர்கள் ஆவார். வா.சா,ஆ.1ல் கண்டுள்ள சாட்சியான ஜோதிபாசு என்பவர் வா.சா,ஆ.1 எழுதி கொடுத்த மலைச்சாமி என்பவரின் மகன் ஆவார் என்றால் சரிதான். மலைச்சாமி மகன் ஜோதிபாசு என்பவர் வா.சா,ஆ.1ல் தரப்பினர் அல்ல சாட்சி தான் ஆவார் என்றால் சரிதான். வா.சா,ஆ.1ல் மலைச்சாமியின் வாரிசுகள் தொடர்பாக சாட்சி ஜோதிபாசுவை ஏன் தரப்பினராக சேர்க்காமல் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளீர்கள் என்றால் என்னுடைய தகப்பனார் அவர்கள் வா.சா.ஆ,1ல் தரப்பினராக இருந்ததால் சாட்சி கையொப்பம் போடப்பட்டுள்ளது. உங்களுக்கு தாவா சொத்தை எழுதி கொடுத்த மலைச்சாமி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் பெயரில் உள்ள பட்டாவை உங்கள் தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் பெயரில் தாவா சொத்திற்குண்டான பட்டா ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்து உங்களால் கிரையம் வாங்கப்பட்டதற்கு வில்லங்கம் ஏதேனும் பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்தேன். கிருஷ்ணன் என்பவர் பெயரில் இருந்தது. மேற்படி வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் வில்லங்க சான்று எதுவும் உங்கள் தரப்பில் பார்க்கவில்லை, பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. உங்கள் தரப்பில் உண்மையாக வில்லங்க சான்று போட்டு பார்த்திருந்தால் 1ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் ஏற்பட்டுள்ள விபரமும் அனுபவ சுவாதீனம் குறித்து உங்களுக்கு தெரிந்திருக்கும், அவ்வாறு உங்களால் வில்லங்கம் எதுவும் பார்க்கப்படவில்லை என்றால் அது

சரியல்ல. உங்களுக்கு கிரையம் செய்து கொடுத்த மலைச்சாமி, கிருஷ்ணன் ஆகியோருக்கு தாவா சொத்தில் உரிமையோ, அனுபவமோ எதுவும் கிடையாது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. கிருஷ்ணன், மலைச்சாமி ஆகியோர்கள் தாவா சொத்தை உங்களுக்கு கிரையம் செய்து கொடுக்கவோ, உங்கள் தரப்பில் கிரையம் வாங்கவோ எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வா.சா,ஆ.1 போலியானது, 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அது தவறு. வா.சா,ஆ.1 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் அது தவறு. உண்மையான ஆவணம் தான். உங்கள் தரப்பில் இந்தியாவில் எங்கு வேண்டுமென்றாலும் பத்திரம் பதிவு செய்து கொள்ளலாம் என்பதை நிரூபணம் செய்வதற்கு அரசு தரப்பு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

வா.சா.ஆ,3ல் தாவா சொத்து உங்களுடைய அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்பதை பொறுத்து பட்டா எண் குறித்து ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் பட்டா ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் வேறு கிரைய ஆவணங்கள் பதிவு செய்திடாமல் இருந்திட ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ,3ல் முத்திரை குறைவு தீர்வை உங்களால் எந்த தேதியில் கட்டப்பட்டுள்ளது என்றால் 2013ம் வருடம் ஆகும். வா.சா.ஆ,3ல் முத்திரை குறைவு தீர்வை உங்களால் எங்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் மதுரை திருமோகூரில் செலுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில எல்லைக்குட்பட்ட சொத்தை பொறுத்து வா.சா,ஆ.3ன் படி வெளிமாநிலத்தில் பதிவு செய்யப்பட்டது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. செல்லும்.

வா.சா,ஆ.5ல் பட்டா எண்.1363 என்பது 1ம் பிரதிவாதி ராஜா என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ,5ல் பட்டா எண்.1363 என்பது தாவா சொத்திற்குரிய பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் பட்டா கோரி வாடிப்பட்டி வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவிற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ரசீது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சரி என்று சாட்சியம் அளித்தார். வா.சா.ஆ.6 எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 16.05.2013 ஆகும். வா.சா.ஆ.6ல் எந்த சர்வே எண் குறித்து குறிப்பிட்டு பட்டா கேட்கப்பட்டது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சர்வே எண் குறித்து குறிப்பிடப்படவில்லை என சாட்சியம் அளித்தார். உங்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கது

அல்ல, வா.சா,ஆ.1 ஆவணம் செல்லத்தக்கது அல்ல, அது 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. உங்களால் போலியான ஆவணங்கள் உற்பத்தி செய்து நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகையினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. போலியான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் உங்களால் கோரப்பட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி